ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2300/06 - 2022 ඔක්තෝබර් මස 03 වැනි සඳුදා - 2 022.10.03
2300/06 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்***

*66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் ஹொரணை பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்.*

*2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தவிசாளர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரென கருதப்படுகின்றமை காரணமாக ஹொரணை பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66 ஆ(2) ஆம் பிரிவின் கீழ் தவிசாளராக பதவி வகித்த அணில் அஷோக ரணதுங்க என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக் கட்சியை சேர்ந்தவரும் ஹொரணை பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு திலிப் புஷ்பகுமார வீரக்கொடி என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ஹொரணை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வன்னகு வத்த வடுகே காலிந்திர ஜயவீர பிரனாந்து ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திலிப் புஷ்பகுமார வீரக்கொடி என்பவர் ஹொரணை பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**காலிந்திர ஜயவீர பிரனாந்து,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*ஹொரணை பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*களுத்துறை,*
*2022, செத்தெம்பர் 30.*

*10 - 0005*

---

## *2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்*

*66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் இபலோகம பிரதேச சபையின் உப தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

*உப தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமித்ததன் காரணமாக இபலோகம பிரதேச சபையின் உப தவிசாளர் பதவி வெற்றிடமாகி யுள்ளதாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66 ஆ(2) என்னும் பிரிவின் கீழ் உப தவிசாளர் பதவி வகித்த ஹேமன்த சந்தகுமார ரத்வத்த என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் (30) நாட் காலக்கெடுவுக்குள் உப தவிசாளர் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும், அக் கட்சியை சேர்ந்தவரும், இபலோகம பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான, உப தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்ட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அதிகாரி முதியன்சேலாகே ரத்நாயக அதிகாரி என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இபலோகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கெங்காதரன் முகுந்தன் ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அதிகாரி முதியன்சேலாகே ரத்நாயக அதிகாரி என்பவர் இபலோகம பிரதேச சபையின் உப தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**கே. முகுந்தன்,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*இபலோகம பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*அநுராதபுரம்,*
*2022, செத்தெம்பர் 30.*

*10 - 0006*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*